# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 24/2026 | LW– 1 | PW– 1 | |
| Name | : ஞானமுத்து ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : பாக்கியம் | | |
| Village | : ஒத்தக்கடை, செந்துறை | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 72/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வயது முதிர்வின் காரணமாக வீட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் மாலை 4.30 மணியளவில் எங்கள் வீட்டில் நான் நின்று கொண்டிருந்தபோது எங்கள் வீட்டைச் சுற்றி நான் கல்லுக்கால் ஊன்றி முள் கம்பி வேலி போட்டு வைத்திருந்ததை எதிரிகள் மற்றும் அவர்களுடன் சேர்ந்து சில நபர்கள் வந்து பிரச்சனை செய்து முள் கம்பி வேலியை சில பேர் அடித்து சேதப்படுத்திவிட்டார்கள். அதை செய்தது யார் என்று சரியாக தெரியாது. ஆனால் அவர்கள் எதிரிகளுடன் இருந்தார்கள். அதைக் கேட்டபோது கூட்டத்திலிருந்த ஒருவர் என்னை கீழே தள்ளிவிட்டதில் எனது உடம்பில் ஊமைக் காயம் ஏற்பட்டது. எதிரிகள் ஏற்கனவே பிரச்சனை செய்ததால் அவர்கள் தள்ளிவிட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு <u>அ.த.சா.ஆ.1</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எங்கள் ஊரில் பஞ்சாயத்து பேசியதில் எதிரிகள் இனிமேல் எவ்வித பிரச்சனையும் செய்யமாட்டோம் என்று உறுதியளித்தன் அடிப்படையில் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(சமாதான மனு <u>அ.த.சா.ஆ.2</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் நான் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 26.10.2022ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் ஐந்து பேரும் குடிபோதையில் வந்து நான் ஊன்றியிருந்த கல்லை உடைத்தார்கள் என்றால் சரியல்ல. அதற்கு நான் ஏன் இவ்வாறு அடாவடிதனம் செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படி தான்டா செய்வோம் என்று சொல்லி அசிங்கமாக பேசி என்னை கையால் அடித்து கீழே தள்ளி காலால் மிதித்தும் அனைவரும் சேர்ந்து கையை மடங்கி கொண்டு உடல் முழுவதும் குத்தினார்கள் என்றால் சரியல்ல. அப்போது செபஸ்டியன் அவனை அடிச்சு கொல்லுங்கடா என்ன கேஸ் வந்தாலும் நான் பார்த்துகொள்கிறேன் என்று சொன்னதால் அனைவரும் என்னை அடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் வலி தாங்க முடியாமல் சத்தம் போடவே என் ஊரையைச் சேர்ந்த பாக்கியராஜ் மற்றும் என் மகன் ஆரோக்கியசாமி ஆகியோர் சத்தம் போடவே எதிரிகள் அங்கிருந்து

ஓடிவிட்டார்கள் என்றும் எனது இடத்தில் நான் ஊன்றி வைத்திருந்த கல்கால்களை எதிரிகள் உடைத்தால் எனக்கு ரூ.3000/- சேதம் ஏற்பட்டது என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாலும், எதிரிகள் கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் நடவடிக்கை தேவையில்லை என்றால் சரிதான்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல-சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.05 15:12:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 24/2026 LW- 5 PW- 2

| | |
|---|---|
| Name | : அழகர் சாமி (பார்வைமகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : கருப்பன் |
| Village | : பாறைமடைபட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of March 2026

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காவல்நிலையத்தில் வைத்து ஆஜர் எதிரிகள் சண்டை சம்பவம் குறித்து அ.சா.1 அழைத்ததன் பேரில் நான் காவல்நிலையம் சென்று இருந்த போது போலீசார் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். **பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 02.11.2022ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், எனது ஊரைச்சேர்ந்த ஆண்டிவேல் என்பவரும் சம்பவயிடத்தில் இருந்த போது நத்தம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தும், சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், ஆண்டிவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.1ம் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.05 15:13:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்